சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No.OS. 203/2017 DW1

**2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் நாள் புதன்கிழமை**

பிரதிவாதித்தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.1 இன் வாக்குமூலம் ஆக்ட் 10/1873 ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை-II என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ்குமார் | தொழில் | |
| த/பெயர் | பச்சியப்ப முதலியார் | ஜாதி | |
| கிராமம் | சைதாப்பேட்டை | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 55 |

**24.09.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றி முழு விவரம் எனக்கு தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக,

16.11.2006 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. 10.01.2007 ம் தேதியிட்ட கிரைய அக்ரிமெண்ட் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2012 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.08.2017 ம் தேதியிட்ட வாதிக்கு எதிரான பிரதிவாதி ஆரணி நகர காவல்நிலையத்தில் கொடுத்த புகார் நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது, 15.09.2017 ம் தேதியிட்ட புகாருக்கான மனு இரசீது அசல் **பி.வா.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 12.08.2013 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.08.2013 ம் தேதியிட்ட பதிலறிவிப்பு அசல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(பி.வா.சா.ஆ.5 மற்றும் 6 ல் வாதியினுடைய பெயர் இல்லை என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது).

வழக்கை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.